சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.NO. 10/2021

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி : RW1

பெயர் மற்றும் வயது : விணுகார்த்திக்

தந்தை பெயர் : சேகர்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவகலத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு தெடர்பாக சம்மனின் பேரில் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட நடைமுறைக்கடிதம் **எ.ம.சா.ஆ 1** ஆகவும், மேற்படி வழக்கில் 1 ம் எதிர்மனுதாரராக உள்ள மனுதாரர் மதன்குமார் த.பெ.தங்கராஜ் குட்டிக்கவுண்டனுார், ஆண்டியக்கவுண்டனுார், உடுமலைப்பேட்டை என்ற நபருக்கு எங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. மேற்படி மனுதாரர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்த வரை 3 ம் தரப்பினர் என்பதால் 1 வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் வேறு அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் எங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.